செ.வெ.எண்: 12 நாள்: 04.04.2020

## பத்திரிக்கை செய்தி

## மாண்புமிகு தமிழநாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி மாற்றுத்திறனாளிகளுக்கு அவசர கால சிறப்பு ஏற்பாடுகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின் படி அவசரகாலங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கு உதவயிடும் பொருட்டு மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரகத்தின் மூலம் அவசரகால 24 மணிநேர தொலைப்பேசி உதவி மையம் அமைக்கப்பட்டு அவர்கள் தொடர்பு கொள்ள 18004250111 என்ற கட்டணமில்லா அழைப்பு எண்ணும் பேச இயலாத மாற்றுத்திறனாளிகள் சைகை மொழி மூலம் கோரிக்கைகளை பதிவு செய்திட 9700799993 என்ற வாட்ஸ்ப் எண்ணும் அமைக்கப்பட்டுள்ளது. இந்த எண்களில் மாற்றுத்திறனாளிகளால் பதிவு செய்யப்படும் கோரிக்கைகள் கட்டுப்பாட்டு அறையிலிருந்து சம்மந்தப்பட்ட மாவட்ட நிர்வாகத்திற்கு தெரிவிக்கப்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை , வருவாய்துறை மற்றும் தன்னார்வ அமைப்புகள் மூலம் மாற்றுத்திறனாளிகள் பதிவு செய்யும் கோரிக்கைகள் உரிய வகையில் நிறைவேற்றிட நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது .

. கரூர் மாவட்டத்தில் இதுநாள் வரை 47 மாற்றுத்திறனாளி நபர்கள் உதவி மையத்தில் அன்றாட வாழ்வதரத்திற்கு தேவையான அத்திய அவசிய தேவைகளான அரிசி மற்றும் மளிகை பொருட்கள் கோரி பதிவு செய்திருக்கின்றனர் அவர்கள் அனைவருக்கும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம், வருவாய்துறை மற்றும் தன்னார்வ அமைப்புகள் இணைந்து அவர்கள் கோரும் அத்திய அவசிய பொருட்கள் மாற்றுத்திறனாளிகளின் இருப்பிடத்தற்கு நேரில் சென்று வழங்கப்பட்டுவருகிறது.

கொரோன-19 வைரஸ் நோய்தொற்றை தடுக்க குற்றவியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 144-ன் கீழ் தடை உத்தரவு விதிக்கப்பட்ட நாட்களில் மாற்றுத்திறனாளி அரசுப் பணியாளர்கள் அலுவலக பணி மேற்கொள்வதிலிருந்து விலக்கு அளித்து அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளதை தொடர்ந்து கரூர் மாவட்டத்தில் பணிபுரியும் மாற்றுத்திறனாளி பணியாளர்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தின் மூலம் மாதாந்திர பராமரிப்பு உதவித்தொகை பெற்று வரும் அனைத்து பயனாளிகளுக்கும் ஏப்ரல்-2020 மற்றும் மே-2020 ஆகிய இரு மாதங்களுக்கான மாதாந்திர பராமரிப்பு உதவித்தொகை மொத்தமாக பயனாளிகளின் வங்கி கணக்கிற்கு ECS முறையில் முன்கூட்டியே அனுப்பி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என கரூர் மாவட்ட ஆட்சியர் தனது செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளார்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.